**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.105/2022**

**Date:** 17.09.2025.

**வா.சா.1 - திருமதி.ஜெமினி**

**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. வழக்கில் குறிப்பிட்டுள்ள முகவரி பிரதிவாதியின் சொந்தஊர், நிரந்தர முகவரி கிடையாது என்றால், சரியல்ல. பிரதிவாதியின் அக்கா பெயர் வசந்த குமாரி. அவர் வேறு ஊரில் இருந்து திருமணம் முடித்து , வழக்குரை முகவரியில் தற்போது கணவன் மனைவியாக குடிவசிக்கிறார்கள் என்றால், சரிதான். வசந்தகுமாரியின் தாய், தந்தையர் ஊர் எனக்கு தெரியாது. பிரதிவாதி சிங்கின் சொந்தஊர் கல்லங்குளி என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. வழக்குரையில் நானும் எனது கணவரும் அரசு வேலையில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால், சரிதான். நான் தனியார் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிகிறேன். எனது முதல் விசாரணையில் வாக்குமூலத்தில் எனது கணவர் எந்த தேதிகளில் பிரதிவாதியிடம் பணத்தை திருப்பி கேட்டார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். அவ்வாறு தேதி குறிப்பிடாததால் , இந்த வழக்கு தாக்கல் செய்ய தகுதி இல்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு வழக்கறிவிப்பு என் கணவர் அனுப்பினாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் மதர் தெரசா மெட்ரிகுலேசன் பள்ளியில் ஆசிரியராக பணியில் இருக்கிறேன். அந்த பள்ளியில் கடந்த 10 வருடங்களாக பணியில் இருக்கிறேன். 2020-2021 ஆண்டுகளில் எனது மாத சம்பளம் ரூ.13,000/- ( carry home salary)

பள்ளியில் வேலை செய்யும்போது தினமும் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வது வழக்கம். அந்த வருகை பதிவேடுகள் எங்களது பள்ளியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துகள் அவரின் சகோதரி வசந்தகுமாரி அவருக்கு விலைக்கு எழுதிக்கொடுத்தது என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. அந்த சொத்தும், அதில் வசந்தகுமாரி வசித்துவரும் சொத்து மற்றும் கட்டுமானங்கள் இருக்கும் விபரங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதி சிங் 5 வயதில் இருந்து அவரின் அக்காவுடன் தான் வசித்துவருகிறார் என்றால், சரிதான். பிரதிவாதி சிங்கிற்கு , திருமணம் ஆகவில்லை. சிங் அவருடைய அக்காவுடன் குடியிருப்பதால் அவருடைய தினசரி வருமானத்தை அவருடைய அக்காவிடம் கொடுப்பது வழக்கம் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. தற்போது சிங் , அவரின் அக்காவுடன் அந்த வீட்டில் குடிவசிக்கவில்லை. பிரதிவாதி அந்த வீட்டில் 5 வருடங்காளக இல்லை என்றால், சரிதான். எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது வ.சா.ஆ–1 கடனுறுதி சீட்டு ( Promissory Note) தான். பிரதிவாதி 11.12.2021 அன்று பணம் கடன் கேட்டார். கிழமை நினைவில் இல்லை. இரண்டு நாள் கழித்து என்பது என்ன கிழமை என்பது எனக்கு நினைவில் இல்லை. 13.12.2021 ல் காலை சுமார் 8.30 மணிக்கு முன்பு அந்த பணபரிவர்த்தனை நடந்தது. பணம் கொடுக்கல் வாங்கல் நடந்தபோது நான் உடன் இருந்தேன். 13.12.2021 அன்று எனது கணவர் வேலைக்கு சென்றிருந்தார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ–1 கடனுறுதி சீட்டில் அவருடைய அக்கா வசந்தகுமாரியும், எனது கணவரின் அண்ணன் ஜஸ்டின் ஜோசப் ஆகிய இருவரும் சாட்சி கையொப்பம் செய்தார்கள். எனது கணவர் பெயரிலும், அவரின் அக்கா வசந்தகுமாரி பெயரிலும்

பிரதிவாதி இரணியல் காவல் நிலையத்தில், அவருடைய அசல் விலை பத்திரத்தை எடுத்துக்கொண்டதாக புகார் கொடுத்தார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. ஜெராக்ஸ் தான் கொடுத்தார்கள். மறுநாளே ரூ.6 லட்சத்தை ரொக்கமாக எனது கணவர் நடத்திவரும் சிறுசேமிப்பு திட்ட பணத்தில் இருந்தும், எனது மகளின் புதுநன்மை கொடுப்பதற்காக சேமித்து வைத்த பணத்தில் இருந்தும் கொடுத்தோம். இந்த விபரத்தை எனது வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு குறைவான மாத சம்பளம் கிடைப்பதாலும், நானும் எனது கணவரும், வசந்தகுமாரியும் சேர்ந்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டி வா.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. பிரதிவாதிக்கு வா.சா.ஆ–1ல் குறிப்பிட்டுள்ள தொகையினை கடனாக வாங்கவேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லை என்றால், வீடு கட்டுவதற்காக கடன் வாங்கினார். வா.சா.ஆ–1ல் பிராமிசரி நோட்டில் சாட்சிகளில் 1வது சாட்சி அவர்களுடைய பெயர் மற்றும் முகவரி மற்றும் கையொப்பம் செய்திருந்தார்கள். 2வது சாட்சியான எனது கணவரின் அண்ணன் பெயர் எழுதியிருந்தார் முகவரி குறிப்பிட்டிருந்தாரா என்ற விபரம் நினைவில் இல்லை. வா.சா.ஆ–1ன் விபரங்கள் எனக்கு தெரியாது என்றால், சிங்கின் விபரங்கள் தான் தெரியும் மற்ற விபரம் தெரியாது. இரணியல் காவல் நிலையத்தில் எனது கணவர் பெயரில் பிரதிவாதி புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். அந்த புகார் மனுவின் விசாரணையில் எனது கணவர் , ஒரு எழுத்துமூல வாக்குமூலம் கொடுத்திருந்தார் என்றால், அதுவிபரங்கள் எனக்கு தெரியாது. அந்த வாக்குமூலத்தில் அவர் பல நபர்களிடமிருந்து கடன் வாங்கி தான் ரூ.6 லட்சத்தை பிரதிவாதியிடம் கொடுத்ததாக

குறிப்பிட்டுள்ளார் என்றால், அதில் எனது சேமிப்பு பணமும் உண்டு. அந்த விசாரணையில் பிரதிவாதியின் சகோதரியும் ஒரு வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. அவர் கொடுத்த வாக்குமூலத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பு அவரும் பிரதிவாதியும் 4,50,000/– கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. இந்த நிலையில் எனது கணவர் குறிப்பிட்ட தேதியில் ரூ.6 லட்சம் கடன் கொடுத்ததாக குறிப்பிடுவது உண்மையில்லை என்றால், சரியல்ல. தற்போது பிரதிவாதி கல்லங்குளியில் ஒரு பெண்ணுடன் வசித்துவருகிறார். அந்த பெண்ணின் பெயர் தெரியாது. பிரதிவாதி , அவரின் அண்ணன் இறந்துவிட்டதால், அவரின் மனைவி மற்றும் குழந்தைகளை பராமரிக்க, அவர்களுடைய சொந்த ஊரான கல்லங்குளியில் அவர்களுடன் வசித்துவருகிறார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. வசந்தகுமாரி 5 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதியின் வருமானம் தனக்கு கிடைக்காத காரணத்தால், எனது கணவருடன் கூட்டு சேர்ந்து மோசடியாக வா.சா.ஆ–1ஐ தயார் செய்து இந்த வழக்கு செய்து இந்த வழக்கு செய்கிறார் என்றால், சரியல்ல. பிரதிவாதியின் கிரைய ஆவணத்தினை கைவசம் வைத்திருந்த அவரின் சகோதரி வசந்தகுமாரி, என்னுடைய கணவருடன் கூட்டு சேர்ந்து , அந்த கிரைய ஆவணத்தில் இருந்த பிரதிவாதியின் கையொப்பத்தை , வா.சா.ஆ–1ல் மோசடியாக போட்டிருக்கிறார் என்றால், சரியல்ல. அதன் காரணமாகதான் பிரதிவாதி , என் கணவர் மீதும், அவரின் சகோதரியின் மீதும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடந்தது என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ–1 மோசடியான ஆவணம்

**என்பதால் நான் பிரதிவாதி மீது எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால், சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

**சார்பு நீதிபதி,**
இரணியல்.